I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
DEPOSITIONS OF WITNESSES R.W.2( on behalf of R3)
M.C.O.P.NO.523/2017

| | | |
|---|---|---|
| Name | : | R.Mithun Gandhi |
| Designation | : | Administrative Officer |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.03.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 02.20 p.m.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் New India Assurance Company க்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எங்களுடைய நிறுவனத்தில் தான் TN 72 AD 0707 என்ற வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனம் என்ன வகையான காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் முழு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 20.11.2010 அன்று விபத்து நடந்த போது இந்த வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததா என்றால் செய்யப்பட்டிருந்தது. முழு காப்பீடு என்றால் அதில் யார் யாருக்கெல்லாம் coverage கிடைக்கும் என்றால் வண்டியில் செல்பவர்கள், வண்டி ஓட்டி செல்பவர், 3ம் தரப்பினர் மற்றும் வண்டிக்கு ஏற்படும் சேதாரம் அனைத்தும் வரும். KA 02 ME 1150 மற்றும் TN 72 AD 0707 என்ற இரண்டு வாகனங்களும் விபத்தில் ஈடுப்பட்டது என்றால் சரிதான்.

இந்த விபத்தில் 3ம் தரப்பினருக்கு விபத்து ஏற்பட்டிருந்தாலும் எங்கள் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல சாட்சி சொல்கிறார் எங்கள் தரப்பு வாகனத்தின் ஓட்டுனர் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் எதிர் வாகன ஓட்டுனரின் கவனக் குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதால்

நாங்கள் இழப்பீடு தர் வேண்டிய அவசியமில்லை. இந்த விபத்து சம்மந்தப்பட்ட சி சி எண். 98/2013 திருவண்ணாமலை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அதில் மனுதாரர் தான் காரணம் என்று சொல்லவில்லை என்றாலும் அந்த வழக்கில் அவரை விடுதலை செய்துள்ளார்கள் என்றாலும் போதிய ஆதாரம் இல்லாத காரணத்தினால் அவரை விடுதலை செய்துள்ளார்கள். தற்போதுள்ள வழக்கு சந்தீப் என்பவரின் தயார் இறந்துவிட்டதால் அவர்களுக்கான நஷ்டஈடு கேட்கிறார் என்றால் சரிதான். TN 72 AD 0707 என்ற வாகனத்தின் உரிமையாளர் பெயர் சரவணன்(2 வது எதிர்மனுதாரர்). இந்த வாகனத்தை ஓட்டி சென்றது ராமகிருஷ்ணன்( 1 வது எதிர்மனுதாரர்). அவர் காவல் துறை ஆய்வாளர் என்றால் அவர் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது.

புகார் மருத்துவமனையில் சென்று தான் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் வாதி, அவருடைய மனைவி, தாய், தந்தை மற்றும் 1ம் எதிர் மனுதாரர் குடும்பத்தார் அனைவரும் தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் அப்போது தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அனைவரும் ஒரே அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்களா என்று எனக்கு தெரியாது.

1ம் எதிர்மனுதாரர் காவல் துறை சார்ந்தவர் என்பதால் அவர் மீது வழக்கு பதிய கூடாது என்று எண்ணி சந்தீப் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 1ம் எதிர்மனுதாரர் புகார் அளித்திருந்தாலும் காவல் துறையினர் விசாரித்து மனுதாரர் மீது தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருந்தது.

சந்தீப் என்பவர் ஆய்வாளர் மற்றும் காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் Crl.O.P.No. 16539/2011 என்ற வழக்கை தொடர்ந்து அதில் CBCID police விசாரிக்க வழக்கு பரிந்துரைக்கப்பட்டது என்றால் சரிதான். (சாட்சி சொல்கிறார் அந்த விசாரணையின் அடிப்படையில தான் CC.No. 98/2013 போடப்பட்டது. ) அந்த வழக்கில் தான் சந்தீப் விடுதலை ஆனார் என்றால் சரிதான்.

இந்த விபத்து குறித்து ராமகிருஷ்ணன் என்பவரின் வழக்கு விசாரணையிலும் விபத்திற்கு காரணம் எதிரி சந்தீப் தான் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரியாது. அதனால் 3ம் தரப்பினர் coverage உள்ளது என்றாலும் இந்த விபத்தில் இறந்து போன சந்தீப்பின் தாயார் ஜெயலட்சுமி என்பவர் இறந்ததற்காக மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க எங்கள் நிறுவனம் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எங்கள் காப்பீட்டு நிறுவனம் செய்த விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்பது சரியல்ல.

**3 வது எதிர்மனுதாரர் தரப்பில் மறு விசாரணை**

உயர் நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை மீது மனுதாரர் மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் CBCID க்கு மாற்றி அவர்கள் விசாரணை செய்து Crl.O.P.No.16539/2011 மனுவில் உயர் நீதிமன்றம் மீண்டும் விசாரணை செய்ய உத்தரவிட்டு அதன் பேரில் விசாரணை செய்து சந்தீப் பெயரில் போடப்பட்டது என்றாலும் அதன் பேரில தான் வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். எங்கள் வண்டி ஓட்டுனர் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை மேலும் போலீசார்

குற்றப்பத்திரிக்கையோ முதல் தகவல் அறிக்கையிலோ எங்கள் வண்டி ஓட்டுனரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லவில்லை.

**மீண்டும் குறுக்கு விசாரணை**

சந்தீப் என்பவரின் அஜாக்கிரதை மற்றும் அதிவேகத்தால் விபத்து ஏற்பட்டது என்று நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**விசாரணை முடிந்த நேரம் :** 02.45p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.